முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,பொள்ளாச்சி

நாள்: 22.04.2026 அ.வ.எண். 227/2016,வா.சா.1. பாலசுப்பிரமணியன், த/பெ.லட்சுமணன்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

13) 1ம் பிரதிவாதியின் சகோதரரின் மனைவி தான் 2 ம் பிரதிவாதி என்றால் சரிதான். அ.வ.எண். 131/1939 வழக்கில் ஏற்பட்ட பைசல் தீர்ப்பின் படி அதில் குறிப்பிட்டுள்ள ஏ அட்டவணை சொத்துக்கள் ஒரு ராமசாமி கவுண்டருக்கு பாத்தியம் என்றால் சரிதான். மேற்படி ராமசாமிகவுண்டர் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அதனால் அவருடைய சொத்துக்கள் அவரது தாயார் சீரங்கம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சீரங்கம்மாள் மேற்படி சொத்துக்களை பொறுத்து கடந்த 29.06.1955 ம் ஆண்டு ஒரு உயில் ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரிதான்

14) மேற்படி உயில் சாசனப்படி சீரங்கம்மாள் ஆயுளுக்கு பின் அவரது மகள் வள்ளியம்மாள் அனுபவித்து வந்து அதன் பின் வள்ளியம்மாள் மக்களான 1, ம் பிரதிவாதிக்கும், 2 ம் பிரதிவாதியின் கணவருக்கும் சொத்துக்கள் போய் சேர வேண்டியது என்றால் சரிதான். சீரங்கம்மாள், வள்ளியம்மாள் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். அவர்கள் இறப்பிற்கு பின் உயில்படி அவரவர் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதியின் சகோதரர் பரமசிவம் இறந்துவிட்டதால் மேற்படி பரமசிவத்தின் மனைவி 2 ம் பிரதிவாதிக்கு சொத்துக்கள் பாத்தியம் ஏற்பட்டு அவர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

15) தாவா பி அட்டவணை வண்டித்தடத்தின் கிழபுறமும் மேபுறமும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பூமிகள் உள்ளன என்றால் சரிதான். தாவா பி அட்டவணை வண்டித்தடத்தை தான் நானும் 1 முதல் 4 பிரதிவாதிகளும் இது

ஒப்பம்/-(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

நாள் வரை அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான்,. 1ம் பிரதிவாதிக்கு மேற்படி பி அட்டவணை வண்டித்தடத்தை தவிர வேறு வண்டித்தடம்இல்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாவா பி அட்டவணை வண்டித்தடத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்,

16)அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள வண்டித்தடங்களின் அளவுகள் சரி என்றால் சரிதான். பி அட்டவணை வண்டித்தடத்தை நான்அனுபவித்து வருவதை 2ம் பிரதிவாதி எவ்வித இடையூறும் செய்யவில்லை என்றால் சரிதான். 2 ம்பிரதிவாதி பி அட்டவணை வண்டித்தடத்தை அனுபவித்து வருவதில் எனக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான்.

3ம் பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்/–(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.